**குளியாப்பிட்டிய நகர சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 யூலை 14 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 14 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து குளியாப்பிட்டிய நகர சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக ரூபா 16,099,294 தொகையான 02 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளின் பெறுமதியை உறுதிப்படுத்து வதற்குத் தேவையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நிலையான வைப்புக்களை புதுப்பிக்கும் அறிவித்தல்களை வழங்குமாறு வங்கிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் நிலையான சொத்துக்கள் அட்டவணை இறுதிக் கணக்குகளுடன் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிய தருகின்றேன் |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், நிதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்ளுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | சபைக்குரிய 04 வாகனங்கள் சம்பந்தமான எரிபொருள் எரிவு பரிசோதனை செய்யப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 04 வாகனங்கள் திருத்தங்களிற்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தமையாலும் அவ்வானங்களை திருத்தம் செய்து டிவடைந்தவுடன் எரிபொருள் எரிவு பரிசோதனயை மேற்கொள்ளுமாறு இயந்திர பொறயியலாளருக்கு எழுத்துமூலம் அறிக்கையிடப் பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 44,989,005 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 56,421,164 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது

| | வருமானம் | 2019 ஆம் ஆண்டு | | | | 2018 ஆம் ஆண்டு | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| i. | வீதவரியும் வரியும் | 15,271 | 13,948 | 13,112 | 12,757 | 15,184 | 16,127 | 13,905 | 12,408 |
| ii. | வாடகை | 17,099 | 20,095 | 19,297 | 1,203 | 16,458 | 16,179 | 16,215 | 405 |
| iii. | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 17,383 | 15,464 | 15,467 | - | 17,525 | 15,118 | 15,115 | 3 |
| iv. | ஏனைய வருமானம் | 132,196 | 114,595 | 111,110 | 36,359 | 118,697 | 13,243 | 38,489 | 37,925 |
| | மொத்தம் | 181,949 | 164,102 | 158,986 | 50,319 | 167,864 | 60,667 | 83,724 | 50,741 |

## 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீத வரி ரூபா 12,723,248 ஆக இருந்ததுடன், அதில் ரூபா 6,402,773 தொகை ஒரு ஆண்டிற்கும் மேற்பட்ட காலத்திற்குரியதாக இருந்தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவை வருமானத்தை சேகரிக்க வேண்டும். | நகர சபை கட்டளைச் சட்டத்தின் 170 ஆம் பிரிவின் பிரகாரம் ஆதனங்களை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் 1,754,421 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| (ஆ) | 13 வீதவரி அலகுகளுக்குரிய ரூபா 2,798,353 இற்குரிய வீதவரி நிலுவையாக இருந்தது. | நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | உரிய நிலுவை மீதிகளை குறிப்பிட்டு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 07 ஆதனங்களிலிருந்து ரூபா 1,057,789 ஆன வாடகை அறவிட வேண்டியிருந்ததது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் தலைமை செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 27,672,720 ஆக இருந்தது. அந்நிலுவையில் 2020 ஆம் ஆண்டில் ரூபா 16,984,667 அறவிடப்பட்டிருந்தது. | நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

நகர சபைகள் சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் 15 பிரதான செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 வரை 05 விடயங்களுக்கு மாத்திரம் பிறப்பிக்கப்பட்டிருந்தன. | சபையின் தேவைப்பாட்டின் பேரில் உப விதிகள் பிறப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில உப விதிகளை பின்பற்ற நடவடிக்கை எடுக்கின்றேன். |

### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஐக்கிய நாடுகளின் அமைப்பின் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்து இனங்காணப்பட்ட 08 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயற்படுத்துவதற்கு ரூபா 10,374,699 நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களின் பிரகாரம் செயற்திறனான செயற்திட்டங்கள் திட்டமிடப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கவில்லை |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 70,336,952 ஆக இருந்ததுடன் இம்மீதி களிலிருந்து ரூபா 29,387,595 தொகை ஒரு ஆண்டிற்கும் மேற்பட்ட காலத்திற்கான நிலுவையாக இருந்தது. | பெறவேண்டிய மீதிகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் நீதிமன்ற தண்டப்பணம் தற்போது கிடைத்துள்ளதாக அறிய தருகின்றேன் |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 57,163,986 ஆக இருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதியில் ரூபா 9,622,124 தொகை உடன்படிக்கை காலம் முடிவடைந்ததன் பின்னர் மீளச் செலுத்த வேண்டிய தொகையாகும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய மூன்றாம் மட்ட பதவிகள் 02 உம், இரண்டாம் தர பதவிகள் 10 உம் ஆரம்ப தர பதவிகள் 25 உமாக 37 வெற்றிடங்கள் காணப்பட்டன. | அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்ட பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள குறித்த விண்ணப்பம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.<br>25 ஆரம்ப தர வெற்றிடங்களுக்காக 2019.08.09 ஆந் திகதி வர்த்தமானியில் வெளியிடப்பட்டு குறித்த நேர்முக பரீட்சை நடாத்தப்பட்டு உரி பரிந்துரை பெறப்பட்டு அங்கீகாரத்திற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் மிகைத்து ஆட்சேர்க்கப்பட்டிருந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக இருந்தது. | மேலதிக ஆட்சேர்ப்பு மட்டுப்படுத்தப்பட வேண்டும். | ஆட்சேர்ப்பிற்கான அங்கீகாரம் கிடைத்ததும் மேற்படி ஆரம்ப மட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கு முடியமாக இருப்பபதுடன் அதன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின மிகைத்து ஆட்சேர்க்கப்பட்ட நபர்களை விலக்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. |

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கணக்கீடு செய்யப்பட்டிருந்த 05 சொத்துக்கள் மற்றும் திண்மக்கழிவுப்பொருள் நிலையம் அமைந்துள்ள 06 ஏக்கர் காணி சபைக்கு கையேற்கப்பட்டிருக்க வில்லை. | கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கண்டுபிடிக்க முடியாத வாகனங்களின் தகவல்களை வாகன தயாரிப்புக் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கும் காப்புறுதி செய்யப்படாத வாகனங்களை காப்புறுதி செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுளளன. |